# காப்பீடு

## உங்கள் பணத்தை நிர்வகித்தல் மெய்த்தகவல் தாள்



## காப்பீடு என்றால் என்ன?

ஏதாவது தவறுதலாகிப் போகும் சூழ்நிலையில் பொருட்களை மாற்றித்தர ஆகும் செலவை காப்பீடு ஏற்றுக்கொள்கிறது. எடுத்துக்காட்டாக:

- நீங்கள் பயணம் செய்யும்போது உங்கள் கைத்தொலைபேசி உங்கள் பையிலிருந்து கீழே விழுந்து உடைந்துவிட்டால், நீங்கள் புதியது ஒன்று வாங்க வேண்டியதிருக்கும்.
- நீங்கள் ஒரு கார் விபத்தில் சிக்கினால் அதன்பின் உங்கள் மருத்துவ உதவிக்கும், அத்துடன் உங்கள் காரைச் சரிசெய்யவும் பணம் செலவழிக்க வேண்டியதிருக்கும்.

## காப்பீட்டு ஆவணம் என்றால் என்ன?

காப்பீட்டு ஆவணம் என்பது ஒரு சட்ட ஒப்பந்தமாகும். இதன்படி ஏதாவது தவறுதலாகிப் போகும் சூழ்நிலையில் உங்களுக்குச் சொந்தமான பொருட்களை மாற்றித்தருவதற்கு அல்லது சரிசெய்துதருவதற்கு ஆகும் செலவை ஈடு செய்ய, உங்கள் காப்பீட்டாளருக்கு நீங்கள் பணம் தர வேண்டும். இதைச் செய்ய நீங்கள் பிரிமியம் என்று சொல்லப்படும் காப்பீட்டுக் கட்டணம் செலுத்த வேண்டும்.

## காப்பீட்டாளர் என்பது யார்?

காப்பீட்டாளர் என்பது காப்பீட்டை விற்பனை செய்யும் ஒரு நிறுவனமாகும். ஆஸ்திரேலியாவில் பல்வேறு வகையான காப்பீட்டாளர்கள் உண்டு.

## காப்பீட்டின் வகைகள்

- ***கார் காப்பீடு*** என்பது உங்கள் காரை நீங்கள் சேதப்படுத்தினாலோ அல்லது அது திருட்டுப் போனாலோ காருக்கு ஆகும் செலவை உள்ளடக்கியது.
- ***வீட்டுக் காப்பீடு (கட்டடக் காப்பீடு)*** என்பது உங்கள் வீட்டுக்கு ஏதாவது ஆகிவிட்டால் (எடுத்துக்காட்டாக நெருப்பு அல்லது புயலினால் சேதம்) பொருட்களை மாற்றித்தர ஆகும் செலவை உள்ளடக்கியது.
- ***வீட்டுப்பொருட்கள் காப்பீடு*** என்பது உங்கள் வீட்டில் உள்ள தட்டுமுட்டு சாமான்கள், துணிமணிகள், சாதனங்கள் மற்றும் நகைகள் போன்ற பொருட்களை மாற்றித்தர அல்லது சரிசெய்து தர ஆகும் செலவை உள்ளடக்கியது.
- ***ஆயுள் காப்பீடு*** நீங்கள் இறந்தால் குறிப்பிட்ட தொகையைக் கொடுக்கும். அந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் யாரைத் தேர்ந்தெடுக்கிறீர்களோ அவர்களுக்கு அத்தொகை செல்லும் (அது உங்கள் ஆவணத்தில் எழுதப்பட்டிருக்கும்).
- ***பயணக் காப்பீடு*** என்பது நீங்கள் வீட்டிலிருந்து வெளியே செல்லும்போது. ஏதாவது தொல்லையில் சிக்கிக் கொண்டால், சிலவற்றுக்கான செலவை உள்ளடக்கியது. எடுத்துக்காட்டாக: நீங்கள் உடல் நலமில்லாமல் போய், அல்லது காயமடைந்து மருத்துவ உதவி தேவைப்பட்டால்: நீங்கள் எதையாவது தொலைத்து, அதை மாற்றித்தர வேண்டியிருந்தால்: உங்களுடைய பொருள் ஏதாவது திருடப்பட்டு, அது மாற்றித்தர வேண்டியிருந்தால்: அல்லது உங்கள் பயணத்திட்டங்கள் மாற்றப்பட்டால் (எடுத்துக்காட்டாக, உங்கள் விமானப்பயணம் இரத்து செய்யப்பட்டால்).
- ***சுகாதாரக் காப்பீடு*** என்பது நீங்கள் உடல் நலமில்லாமல் போனாலோ, அல்லது காயமடைந்தாலோ அதற்கான மருத்துவச் செலவின் ஒரு பகுதியை உள்ளடக்கியது.
- ***கைத்தொலைபேசிக் காப்பீடு*** என்பது உங்கள் கைத்தொலைபேசிக்கு ஏதாவது நேர்ந்தால் அதற்கான செலவை உள்ளடக்கியது (எடுத்துக்காட்டாக, அது வேலை செய்யாமல் போனால் அல்லது அதை நீங்கள் சேதப்படுத்தி விட்டால்).

## நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்

- காப்பீடு என்பது ஏதாவது தவறுதலாகிப் போகும் சூழ்நிலையில் நீங்கள் செலுத்தும் பணமாகும்.
- காப்பீடு என்பது பொருட்களுக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் அவற்றை மாற்றித்தர ஆகும் செலவை உள்ளடக்கியது
- ஆஸ்திரேலியாவில் கார் போன்ற சில பொருட்களுக்கு நீங்கள் கட்டாயம் காப்பீடு செய்திருக்க வேண்டும்.

## எங்கே மேலதிகத் தகவல்களைப் பெறுவது

காப்பீடு பற்றிய மேலதிக விவரங்களுக்கு, MoneySmart இணையதளமான **www.moneysmart.gov.au** என்ற முகவரிக்குச் செல்லுங்கள் அல்லது 1300 300 630 என்ற எண்ணுக்கு அழையுங்கள்.

MONEYSMART

## யூலியும் ஏபோலும் தங்களுடைய புதிய வீட்டுக்குச் செல்கின்றனர்

யூலியும் ஏபோலும் ஒரு புதிய வீடு வாங்கியதற்கு மிகவும் ஆனந்தச் சிலிர்ப்புடன் இருந்தார்கள். புதிய வீட்டுக்குச் செல்வதற்கு ஏராளமான புது தட்டுமுட்டுச்சாமன்கள் மற்றும் தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி போன்ற சாதனங்களும் வாங்கியிருந்தார்கள். அத்துடன் நகைகள் மற்றும் கணினி போன்ற விலையுயர்ந்த சாமான்களும் வைத்திருந்தார்கள்.

ஏபோலின் நண்பர் ஒருவர் காப்பீடு செய்து கொள்ளுங்கள் என்று அவரிடம் சொல்லியிருந்தார். ஏனென்றால் காப்பீடு உங்கள் முக்கியமான பொருட்கள் ஏதாவது தவறுதலாகிப் போனால் மாற்றித்தர அல்லது பழுது பார்த்துத் தர ஆகும் செலவை உள்ளடக்கியுள்ளது. தனக்கும், யூலிக்கும் சொந்தமான பொருட்கள் தங்களுக்கு எவ்வளவு முக்கியமானவை என்பதை ஏபோல் எண்ணிப்பார்த்தார்.

ஏபோல் ஒரு காப்பீட்டு ஆவணத்துக்கு எவ்வளவு செலவாகும் என்பதைக் கண்டுகொள்ள இரு காப்பீட்டு நிறுவனங்களைத் தொடர்பு கொண்டார். காப்பீட்டு ஆவணம் என்பது அவரும், காப்பீட்டாளரும் என்ன காப்பீடு செய்யப்பட வேண்டும் என்பதை இணைந்து ஒத்துக் கொள்வதுதான் என்பது அவருக்குத் தெரியும்.

ஒவ்வொரு காப்பீட்டு நிறுவனமும் ஏபோலிடம் 'excess' என்று அழைக்கப்படும் கூடுதல் தொகையைக் கூறினர். இத்தொகைதான் காப்பீட்டுத் தொகையைக் கோரும்போது ஏபோல் கொடுக்க வேண்டிய தொகையாகும். கோரல் என்பது அவர் காப்பீட்டாளரிடம் தன்னுடைய காப்பீட்டு ஆவணத்தில் உள்ளடக்கிய பொருளுக்குப் பணம் தரவேண்டுமெனக் கேட்கும் சமயத்தில்தான் என்பது ஏபோலுக்குத் தெரியும்.

ஏபோலும் யூலியும் தங்கள் வீட்டை ஈடு செய்யும் அல்லது பழுது பார்க்கும் தேவை ஏற்பட்டால் அதற்கான செலவை உள்ளடக்கும் வீட்டுக் காப்பீடு (கட்டடக் காப்பீடு) எடுக்க முடிவு செய்கிறார்கள். அத்துடன் அவர்கள் மற்றொருவகைக் காப்பீடும் – வீட்டுப்பொருட்கள் காப்பீடு – எடுக்கிறார்கள். இது வீட்டினுள் இருக்கும் பொருட்கள் திருட்டுப் போகும்போது அல்லது சேதமடையும்போது ஆகும் செலவை உள்ளடக்குகிறது. இப்பொருட்கள் அவர்களுடைய துணிமணிகள், தட்டுமுட்டுச் சாமான்கள், சாதனங்கள் மற்றும் கணினி போன்றவையாகும்.

யூலியும் ஏபோலும் வேறு வகையான காப்பீட்டைப் பற்றியும் யோசிக்கிறார்கள். யூலி சுகாதாரக் காப்பீடு செய்து கொண்ட தன்னுடைய நண்பரின் தாயாருக்கு அவர் நோய்வாய்ப்பட்டிருந்தபோது மருத்துவச் செலவில் ஒரு பகுதியைச் செலுத்துவதற்கு அந்தக் காப்பீடு உதவியாயிருந்ததைப் பற்றி ஏபோலிடம் கூறினார்.

யூலியும் ஏபோலும் ஏதாவது தவறுதலாகிப் போகும் சூழ்நிலையில், தங்கள் வீட்டுக்கும், வீட்டுப்பொருட்களுக்குமான காப்பீடு தங்களிடம் இருக்கிறதே என மகிழ்ச்சியடைகிறார்கள். எதிர்காலத்தில் சுகாதாரக் காப்பீடு பெறுவதைப் பற்றியும் யோசித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

© ASIC 2012 அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

This page has been intentionally left blank.

© ASIC 2012 அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை